Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 307

வெள்ளிக்கிழமை 29 செப்ரெம்பர் 2023

புரட்டாதி 12 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

**உயிருக்கு தொடர் அச்சுறுத்தல்**

**தீர்ப்பை மாற்றுமாறு அழுத்தம்**

**புலனாய்வாளர்கள் கண்காணிப்பு**

**பொலிஸ் பாதுகாப்புக் குறைப்பு**

# நாட்டைவிட்டு வெளியேறினார் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி



**முல்லைத்தீவு, செப்ரெம்பர் 29**

உயிர் அச்சுறுத்தல்கள், தீர்ப்பை மாற்றுமாறு பிரயோகிக்கப்பட்ட தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாகப் பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளார் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா. »11

## ஜனாதிபதி ரணில் மூலம் காரியம் செய்விக்கலாமாம்

விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

விரிவு:- பக் - 11 இல்

## நீதியை நிலைநாட்டுவதற்கு பேரினவாதம் இடமளியாது

ஈ.சரவணபவன் ஆதங்கம்

யாழ்ப்பாணம், செப். 29
சிங்கள – பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலையே இலங்கையின் அனைத்து »11

## முதியவரொருவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 29
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கடந்த 24ஆம் திகதி காணாமற்போன முதியவர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். »11

## சர்ச்சைக்குரிய சட்டவரைவுகள் நாடாளுமன்றில்

கொழும்பு, செப். 29
சர்ச்சைக்குரிய இரு சட்டவரைவுகளாகக் காணப்படுகின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்ட »09



## சவாலுக்குட்படுகின்றது நீதியின் இயங்குநிலை

சி.சிறீதரன் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, செப். 29
முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா, தன்மீது தொடர்ச்சி »11

நாணய நிதியத்தின்

## இரண்டாம் கட்ட கடன் விரைவில்!

இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 29
சர்வதேச நாணய நிதியத்தின் 2ஆம் கட்ட கடன் விரைவில் கிடைக்கும். இது தொடர்பில் வீண் அச்சம் கொள்ள வேண்டியதில்லை - என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். »11

வல்லிபுர ஆழ்வார் தேரில்

## கவனத்தை ஈர்த்த கற்பூரச்சட்டி

யாழ்ப்பாணம், செப். 29
வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த் திருவிழாவில் இளம் குடும்பப் பெண்மணியொருவர் மேற்கொண்ட கற்பூரச் சட்டி நேர்த்தி பலரதும் »09

## அரசாங்கத்தினுடைய கோரமுகம் அம்பலம்

நீதிகோரி முல்லையில் போராட்டம்

து.ரவிகரன் தெரிவிப்பு »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டிறுதிக்குள் 15 இலட்சம் சுற்றுலாவிகள் இலக்கு

கொழும்பு, செப். 29

ஆண்டிறுதிக்குள் 15 இலட்சம் சுற்றுலாவிகளை நாட்டுக்கு வரவழைப்பதற்கு அவசியமான ஊக்குவிப்புத் திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்திருப்பதாக சுற்றுலாத்துறை பதில் அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டிருந்தபோதே பதில் சுற்றுலாத்துறை பதில் அமைச்சர் டயனா கமகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தின் ஆரம்பப் பகுதியில் 10 இலட்சம் சுற்றுலாவிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இவ்வருட இறுதிக்குள் 15 இலட்சம் பேரை வரவழைக்கமுடியும். வருடத்தின் இறுதிக் காலப்பகுதியிலேயே நாட்டுக்கு சுற்றுலாவிகளின் வருகை அதிகமாக இருக்கும் என்பதால், இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெருமளவான சுற்றுலாவிகளை இந்த நாட்டுக்கு வரவழைக்க வேண்டியுள்ளது.


எல்ல, நுவரெலியா, காலி மற்றும் கொழும்பு உள்ளிட்ட சுற்றுலாவிகள் அதிகளவில் நடமாடும் பகுதிகளில் இரவு நேரங்களில் அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு அவசியமான ஏற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

நாட்டில் சுற்றுலா ஈர்ப்பு மிக்க நகரங்களை தூங்கா நகரங்களாக மாற்றியமைக்கவேண்டும் என்றும், சில சட்டதிட்டங்களைத் தளர்த்த வேண்டும் என்பதோடு, சுற்றுலாவிகளுக்கு நாட்டில் செலவுகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கத் தவறும் பட்சத்தில் நாட்டுக்கு வருமானம் கிட்டாது.

அதேபோல், நாட்டுக்கு வரும் சுற்றுலாவிகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மைச் சார்ந்துள்ளதெனவும், சிலர் செய்யும் தவறான செயற்பாடுகளால் முழு நாட்டுக்கும் அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

இந்நாட்டின் டொலர் வருமானத்தை அதிகரிப்பதற்கு உள்நாட்டு கஞ்சா உற்பத்திக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்திருக்கின்றது. இரு வாரங்களுக்குள் அதற்கு அமைவான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்.

இந்த வேலைத்திட்டம் ரூபாவை ஈட்டுவதாக அன்றி டொலரை ஈட்டிக் கொள்வதற்கானதாக அமைய வேண்டும். அதற்கான அதிகாரசபையொன்றின் கீழ் ஏற்றுமதி வலயத்துக்கு உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஒ-44)



## மின் தாக்கி யானை சாவு: சந்தேகநபர் ஒருவர் கைது

முல்லைத்தீவு , செப்.29

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட கனகரத்தினபுரம் பகுதியில் விவசாயி ஒருவரால் பாதுகாப்புக்காக பொருத்தப்பட்ட மின்சார வேலியில் சிக்கி காட்டுயானை ஒன்று உயிரிழந்ததை அடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 24ஆம் திகதி யானை மின் தாக்கி உயிரிழந்திருந்தது. இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை ஒட்டுசுட்டான் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், மின்சார வேலி அமைத்து சட்டவிரோதமான முறையில் மின் பாய்ச்சப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. அதையடுத்து 63 வயது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். 35 வயது மதிக்கத்தக்க 9 அடி 5அங்குலம் உயரம் கொண்ட யானையே உயிரிழந்துள்ளது. (எ-19)

## ரயிலுடன் மோதி 4 யானைகள் சாவு

கொழும்பு, செப்.29

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி வந்த தபால் ரயிலுடன் மோதி 4 யானைகள் உயிரிழந்துள்ளன.

விபத்தை அடுத்து ரயில் இயந்திரத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு சீரமைக்கப்பட்டு, சுமார் 3 மணிநேர தாமதத்தின் பின்னர் ரயில் பயணத்தைத் தொடர்ந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்கமுவ அம்பன்பொல பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் இந்த விபத்து நடந்துள்ளது என்று ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் என். ஜே. இதிபொலகே தெரிவித்தார். (எ-இ)



வரலாற்று பிரசித்திபெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் இரதோற்சவம் பெருமளவான பக்தர்கள் புடைசூழ பக்திபூர்வமான நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-66)

## பூநகரியில்
## விதிமுறைகளைப் பின்பற்றாத உணவகங்களுக்குத் தண்டம்

கிளிநொச்சி, செப். 29

கிளிநொச்சி, பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்காது உணவு கையாளும் நிலையங்களை நடத்திய 5 வர்த்தகர்களுக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்தவாரம் உணவு கையாளும் நிலையங்களில் திடீர் சோதனைகளை நடத்தினர்.

அதன்போது 5 உணவு கையாளும் நிலையங்கள் உணவுப் பாதுகாப்பை சரியாகக் கடைப்பிடிக்காமை, சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக உணவு கையாள்கை மற்றும் அடிப்படைக்கட்டமைப்புகளை சீராகப் பேணாமை ஆகிய குறைபாடுகளுடன் இயங்கியமை கண்டறியப்பட்டன. அதனையடுத்து 5 வர்த்தகர்களுக்கும் எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டபோது வர்த்தகர்களுக்கு ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் அன்றைய தினம் வழக்குக்குச் சமுகமளிக்காத உணவு கையாளும் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு அந்தந்தப் பிரதேச பொலிஸ் நிலையங்களினூடாக திறந்த பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது. (ச-9)

# டியூகோ கார்சியாவில் தமிழ் அகதிகள்; விசாரணைகள் பிறிதொரு நாட்டில்

கொழும்பு, செப்.29

டியூகோகார்சியா தீவில் சிக்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகளை ஐக்கிய இராச்சியம் போன்ற பாதுகாப்பான மூன்றாவது நாட்டில் வைத்து விசாரணை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 3ம் திகதி இலங்கைத் தமிழ் அகதிகள் 120 பேர் படகு மூலம் புறப்பட்டு டியூகோ கார்சியா தீவில் தஞ்சமடைந்திருந்தனர். பிரிட்டிஷ் இந்து சமுத்திரப் பிராந்திய ஆணையாளரின் கட்டுப்பாட்டின் கீழேயே டியூகோ கார்சியா தீவு உள்ளது.

இந்த அகதிகள் 120 பேரும் சட்டப்படி இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்று பிரிட்டிஷ் இந்து சமுத்திரப் பிராந்திய ஆணையாளர் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்புக்கு எதிராக பத்துப் பேர் சேர்ந்து பிரிட்டிஷ் இந்து சமுத்திரப் பிராந்திய உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். தாங்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் இலங்கையில் சித்திரவதைக்கு ஆளாக நேரிடும் என இவர்கள் தெரிவித்திருந்தனர்.

அதையடுத்து இலங்கைக்கு திருப்பி அனுப்புவது என்ற தமது தீர்மானத்தை மீளப்பெற்றுக் கொண்ட பிரிட்டிஷ் இந்து சமுத்திர பிராந்திய ஆணையாளர் சர்வதேச நியமங்களுக்கு அமைய பிரிட்டனைப் போன்று (ஜனநாயகத்தைப் பேணும்) நாடொன்றில் இவர்களை தங்க வைத்து விசாரணை செய்வதற்கு இணங்கியுள்ளார் .

முன்னதாக இவர்களை ருவாண்டாவுக்கு (ருவாண்டாவில் வைத்து விசாரிக்கப்போவதாக) அனுப்பப் போவதாகப் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு கூறியபோது அதற்கு அகதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் ஒவ்வொரு தனி நபர்களினதும் விண்ணப்பங்கள் விரைவாகப் பரிசீலிக்கப்படும் என்றார். "எந்த ஒரு தனிநபரையும் திருப்பி அனுப்பி அவர்களுக்கு சிக்கலை ஏற்படுத்தமாட்டோம்" என பிரிட்டிஷ் இந்து சமுத்திரப் பிராந்திய ஆணையாளர் தெரிவித்துள்ளார். (எ-6)

## அபிவிருத்திக்குழுக் கூட்டம் எம்.பிக்கள் பங்கேற்பில்லை

யாழ்ப்பாணம், செப். 29

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற நிலையில் யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் த. சித்தார்த்தன் மாத்திரமே பங்கேற்றிருந்தார். (ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்படவுள்ள காணிகளில் பயிர்ச்செய்கை

யாழ்ப்பாணம், செப். 29

வனவளத் திணைக்களம் மற்று[illegible]ன உயிரிகள் திணைக்களத்தின் கீழ் இருந்து விடு[illegible]கப்பட உள்ள காணிகளில் பயிர்ச்செய்கையை மக்கள[illegible]ம்பிக்கலாம் என யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணை[illegible]புக் குழுத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் முதற்கட்டமாக அடையாளப்படுத்தப்பட்ட காணிகள் மக்களுக்கு வழங்கப்பட உள்ளன.

இந்தச் செயற்பாடானது பிரதேச செயலக அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளும் இணைந்து அதற்கான வேலைத்திட்டங்களை நிறைவு செய்துள்ளனர் - என்றார். (ஒ-27)

அபிவிருத்தித் திட்டங்கள்

# மக்கள் பங்கேற்புடன் காரைநகரில் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 29

காரைநகரில் உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள பணிகள் தொடர்பில் மக்கள் கருத்துகளைப் பெறும் கூட்டம் நாளை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விவரங்களை காரைநகர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பார்வையிட்டு கருத்துகளைத் தெரிவிக்கலாம் என காரைநகர் பிரதேசசபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)



# காரைநகரில் கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், செப். 29

காரைநகர் மருதபுரத்தில் மோட்டார் சைக்கிளில் கஞ்சாவை கடத்திச் சென்ற சந்தேகத்தில் 43 வயதான ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார். இராணுவப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்ட அவர் விசேட அதிரடிப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ-இ)

# 100 கிலோ கஞ்சா கடற்படையால் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 29

இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட 100 கிலோ கஞ்சா காரைநகரில் நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளது.

கடற்படையினர் சந்தேகத்துக்கிடமான படகைச் சோதனையிட முயன்றுள்ளனர். சந்தேகநபர்கள் படகைவிட்டுத் தப்பியோடியுள்ளனர். கடற்படையினர் படகைக் கைப்பற்றிச் சோதனை மேற்கொண்டனர். படகிலிருந்து 3 உரைப் பைக்கள் மீட்கப்பட்டன. அவற்றுள் கஞ்சா பொதி செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது. அதனை மீட்டு ஊர்காவற்றுறை பொலிஸிடம் கடற்படையினர் பாரப்படுத்தியுள்ளனர். (ஒ-20-26)

# தடையையும் மீறி விகாரை அமைப்பு

திருகோணமலை, செப். 29

**திருகோணமலை இலுப்பைக்குளத்தில் தடையுத்தரவை மீறி அமைக்கப்பட்டுவரும் விகாரையால் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.**

திருகோணமலை - நிலாவெளி பிரதான வீதியின் பெரியகுளம் சந்திக்கு அண்மையில் தடையுத்தரவையும் மீறி கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் அந்தப்பகுதியில் பதற்ற நிலை தோன்றியுள்ளது.

இப்பணிகள் இரவு வேளைகளில் இரகசியமான முறையில் மேற்கொள்ளப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு சிவில் பாதுகாப்புப் படையினரால் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிங்கள மக்களின் குடியிருப்பு இல்லாத இடத்தில் விகாரை அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்தச்செயற்பாடானது இனங்களுக்கிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்து வருகின்றனர். விகாரைக்கான பணிகளை இடைநிறுத்தக்கோரி ஆளுநரால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர். (ஒ-50)



# மிலாத் நபி நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று

யாழ்ப்பாணம், செப். 29

மிலாத் நபிகள் நாயகத்தின் பிறந்ததினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களில் விசேட துவாப்பிரார்த்தனைகள் மற்றும் குப்தா பிரசங்கங்கள் இடம்பெற்றன. யாழ்ப்பாணம் நாவாந்துறை ஜின்னா பள்ளிவாசலில் விசேட துவாப்பிரார்த்தனை மற்றும் குப்தா பிரசங்கம் மௌலவி க.ஜமீன் தாபீர் தலைமையில் [illegible] கேற்றனர். (ச-27)




**வெ**ள்ளம் வீட்டுக்குள்ள பூந்த பிறகுதான் மண்வெட்டி, பிக்கானோட அணைகட்டப் போறது எங்கட பிறவிக்குணம். செம்மனச் செல்வி காலத்தில இருந்தே இப்பிடி ஆறுபெருகினபிறகு அணை கட்டுறதும், அதை ஒழுங்காக் கட்டமுடியாமல் "அடிவாங்கி" ஆய்க்கினைப்படுறதும் வழக்கமாப் போட்டுது. அதை இண்டை வரைக்கும் "ஒழுங்கா" பின்பற்றிக் கொண்டுவாறதில முதல்பரிசு எங்கட பிரதேச சபையளுக்குத்தான் குடுக்கவேணும். அந்தளவுக்கு முதல்ல அசமந்தமா இருந்திட்டு பிறகு சுடுகுது மடியைப் பிடி எண்டமாதிரி அந்தரப்பட்டு எல்லாத்தையும் கெடுக்கிறதில அவையள் கெட்டிக்காரர்.

முந்தி சபையளில மக்களால தெரிவு செய்யப்பட்டவை இருந்ததால அவையள் நினைவுபடுத்தி, கொஞ்சமாவது முன்னுக்கு வேலை செய்திச்சினம். ஆனால் இப்ப அப்பிடி அவைக்கு நினைவுபடுத்த ஆக்கள் இல்லாததால, இனி வரப்போற மாரிமழையைப் பற்றியோ, வெள்ளத்தைப் பற்றியோ, வெள்ளம் வந்தால் தலைவிரிச்சு கலையாடப் போற டெங்கைப் பற்றியோ கன உள்ளூராட்சி சபையளுக்கு அக்கறையே இல்லை. ஆனாலும் யாழ்ப்பாணம் முனிசிபல்காரர் மாதிரி சில சபையள் இந்த விசயத்தில இப்பவே கவனமெடுத்து வாய்க்கால் எல்லாம் திருத்துறதையும் பாராட்டத்தான் வேணும். இந்த அக்கறை மற்ற சபையளில இலையெண்டதுதான் பிரச்சினை.

இப்ப டெங்கு வாரம் அறிவிச்சு, தங்கட சபையில உள்ள பொது இடங்களைச் சுத்தப்படுத்தி டெங்குவராதமாதிரி செய்யிறதுக்குக் கூட, பெரும்பாலான பிரதேச சபையள் பின்னடிக்கினமாம். ''இருக்கிற வேலைக்குள்ள இப்ப சிரமதானம் செய்யாததுதான் குறை'' எண்ட கணக்கில, என்னதான் மேலிடத்தில இருந்து டெங்கு வாரத்திலயாவது சிரமதானம் செய்யச்சொல்லி கடிதங்கள் வந்தாலும் அதைக் கசக்கி எறிஞ்சுபோட்டு தங்கடபாட்டில இந்தப் பிரதேசசபைக்காரர் இருக்கினமாம். அப்பிடி தங்கட சபைக்குள்ள இருக்கிற இடங்களைச் சுத்தம் செய்யக்கூட நேரமில்லாதளவுக்கு உந்த உள்ளூராட்சிக்காரர் என்னதான் வெட்டிக்கிழிக்கினமெண்டும் தெரியேலை. மேலிடம் சொன்னபடி ஒண்டும் செய்யினமில்லை, சனங்களின்ர கோரிக்கைப்படியும் ஒண்டும் செய்யிறேலை. அப்ப என்னதான் செய்யினம் எண்டு சனங்கள் கேப்பினம் தானே? இப்ப சும்மா இருந்துபோட்டு, பிறகு மழை பெய்து, டசின்கணக்கில ஆக்கள் டெங்கால பாதிக் கப்படேக்க மட்டும் விழுந்தடிச்சுக் கொண்டுபோய், அந்த இடம் முழுக்க புகை அடிச்சு ஒரு பிரியோசனமும் இல்லை. வருமுன் காக்கிறதுதான் எல்லாருக்கும் நல்லது. இதை எங்கட உள்ளூ ராட்சிக்காரர் உணருவினமோ?



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 29

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் சிறுவர் தின நிகழ்வு ஒக்ரோபர் 2ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன் கே.சற்குணதேவன், ஓய்வு நிலை அதிபர் என். அருட்சோதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-159)

# பெரியபுராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 29

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்கள் வழங்கும் வாராந்தப் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு தெல்லிப்பழை பன்னாலை திருவருள்மிகு சிவபூதராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் அவர்களின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன் பங்கேற்கவுள்ளார்.

'பேரொளிப் பிழம்பாம் அருள் பெற்ற நாயனார்' எனும் விடயப்பொருளில் இளம் சைவப் புலவர் க.கைலநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ச)

# சிறுவர் கலையரங்கும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், செப். 29

இணுவில் அறிவாலயத்தின் முழுநிலா நாள் சிறுவர் கலையரங்கும் திருக்குறள் மனனப் போட்டி பரிசளிப்பு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இணுவில் அறிவாலய செயலாளர் வரதராஜா தனகோபி தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கிமுன்னாள்முகாமையாளர் வை. சிறிஸ்கந்தவரோதயன், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் சா.முத்துக்குமாரசாமி, கௌரவ விருந்தினராக விவசாயி இராசையா பால்ராஜன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச)

## வாசிப்பை ஊக்குவிக்க

# வீடுகளில் நூலகம் அமைத்தல் போட்டி

யாழ்ப்பாணம், செப். 29

வாசிப்பு மாதத்தையொட்டி சிறந்த வீட்டு நூலகம் உருவாக்கும் போட்டி சாவகச்சேரி பிரதேசசபையின் வரணி பொது நூலகத்தால் நடத்தப்படவுள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் தமது வீடுகளில் நூலகம் உருவாக்குவதை ஊக்குவிக்கவும் வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கவும் இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

போட்டியில் வீட்டு நூலகம் வைத்திருப்போரில் சிறந்த வீட்டு நூலகம் தேர்வு செய்யப்பட்டு அதனை மேம்படுத்தும் பொருள்கள் மற்றும் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

வீட்டு நூலகம் வைத்திருக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு நூலகர் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-9)

# வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரியில் போட்டிகள்

சாவகச்சேரி, செப். 29

சாவகச்சேரி பிரதேசசபையின் வரணி பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நூலக எல்லைக்குட்பட்ட மாணவர்களுக்குப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தலா மூன்று மாணவர்கள் பங்கேற்கலாம்.

தரம் - 1 மாணவர்களுக்கு சித்திரப்போட்டி, தரம் - 2 மாணவர்களுக்கு ஒட்டுச்சித்திரம், தரம் -3 மாணவர்களுக்கு சொல்லாக்கம் ஆங்கிலம், தரம் - 4 மாணவர்களுக்கு திருக்குறள் 8ஆம் அதிகாரம், தரம் - 5 மாணவர்களுக்கு நுண்ணறிவும் பொதுஅறிவும், தரம்- 6 மாணவர்களுக்கு பேச்சு, தரம்-7 மாணவர்களுக்கு கவிதை, தரம் - 8 மாணவர்களுக்கு சுவரொட்டி, தரம் - 9 மாணவர்களுக்கு சிறுகதை, தரம் -10 மாணவர்களுக்கு சமகாலத்தில் நூலகம் சமூகத்துக்கு ஆற்றும் பங்கு மற்றும் தரம்- 11 மாணவர்களுக்கு 'போதை எனும் தீயபாதை/ நூலக வாசிப்பின் முக்கியத்துவம்' எனும் தலைப்பில் கவிதை ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

விண்ணப்பங்கள் பாடசாலை அதிபரின் பரிந்துரையுடன் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு நூலகர் அறிவித்துள்ளார். (ச-9)

# போதையில் சாரத்தியம் இருவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், செப். 29

கோப்பாய்ப் பொலிஸ் பிரிவில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை மதுபோதையில் வாகனம் செலுத்தியமை போன்ற குற்றச்சாட்டில் இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். குற்றத்தை அவர்கள் ஒப்புக்கொண்டதையடுத்து ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபாவும் மற்றையவருக்கு 55 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஒ-26)

# ஆபத்தான சாரத்தியம் ரூ. 10 ஆயிரம் தண்டம்

கோப்பாய் பொலிஸ்பிரிவில் இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளை ஆபத்தான முறையில் செலுத்தியமைக்காக யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. சந்தேகநபர் குற்றத்தை ஒப்பு கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் இரண்டு வாரம் சாரதி அனுமதிப்பத்திரத்தை இடை நிறுத்தி நீதிமன்று உத்தரவிட்டது. (ஒ-26)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. ஆதாயம் உண்டாகும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம் :** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியும் உற்சாகமும் பெறுவீர்கள்.

**சிம்மம்:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் குடும்பத்தினருடன் சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வழிபடுவது நலம் தரும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். திடீர்ச் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வியாபாரம் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**விருச்சிகம் :** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படும் நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பிணக்குகள் நீங்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.



# நூல் வெளியீடு

சைவமகாசபையினரால் 10ஆம் ஆண்டு நிறைவுதினத்தை முன்னிட்டு சைவ சித்தாந்தத் துறையுடன் இணைந்து நடத்தவுள்ள திருமந்திர மாநாடு மற்றும் சிறார்களின் அறநெறிக்கல்வியை மேம்படுத்துதலை இலக்காகக் கொண்டு 50 திருமந்திரங்கள் பொருள் மற்றும் அடிக்குறிப்புகளுடன் கையடக்க வடிவில் சைவ பரிபாலன சபை மண்டபத்தில் அண்மையில் வெளியிடப்பட்டது. சைவமகாசபை பொதுச்செயலாளர் மருத்துவர் பரா நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தலைவர் சிவத்திரு சண்முகரத்தினம் வெளியிட்டு வைக்க சைவ சித்தாந்தத்துறைத் தலைவர் கலாநிதி சந்திரசேகரன் முதற்பிரதியைப்பெற்று வெளியீட்டுரையை நிகழ்த்தினார். சிறப்புரையை எந்திரி சர்வராசா, எந்திரி சனாதனன், இந்து தொண்டர் முதலுதவிச்சபைத் தலைவர் மோகன்ராஜ் ஆசிரியர் விநோத ஆகியோர் நிகழ்த்தினர். (ய-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இலங்கையும் தன் வாயால் கெடும்

இலங்கை பொருளாதார மீட்சிக்கு வெளிநாடுகளையே முதன்மையாக நம்பியிருக்கின்றது. அதைத்தவிர அதற்கு வேறு வழியில்லை. சர்வதேச நாடுகளை நம்பியிருக்கும் இலங்கை, இரு அணிகளாக நிற்கும் அந்த நாடுகளை விலாங்கு மீன் பாணியில் ஏமாற்றி வந்திருக்கின்றது. இப்போதும் அதைத்தான் செய்கின்றது. ஆனால், இந்த பிற்போக்குத்தனமான ஆட்டம் நீடித்து நிலைப்பதற்கான வாய்ப்பில்லை என்பதைத்தான் அண்மைக்காலச் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழியாக, பிராந்திய வல்லரசான இந்தியா, கனடாவுடன் முரண்பட்டு நிற்கையில் தன்னையும் இந்தியாவைப்போன்ற வல்லாதிக்கச் சக்தியாக நினைத்துக்கொண்டு இலங்கையும் கனடாவை அறிக்கைகள் மூலம் தாக்கியிருக்கின்றது.

காலிஸ்தான் அமைப்பின் தலைவர் கனடாவில் கடந்த ஜூன் மாதம் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். அவரது கொலையின் பின்னணியில் இந்தியாவின் உளவு அமைப்பு இருப்பதாக கனேடியப் பிரதமர் ட்ரூடோ பகிரங்கமாகக் குற்றம் சாட்டிய பின்னர் இந்திய கனேடிய உறவுநிலை விரிசலாகியது. இந்தச் சந்தர்ப்பத்தில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, 'கனேடியப் பிரதமர் ஒரு பொய்யர்'என்று குறிப்பிட்டிருந்தார். இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லை என்றபோதும் அவர் இனப்படுகொலை நடந்ததாகக் குறிப்பிட்டிருந்தார் என்று சப்ரி சாடியிருந்தார். இதற்கு மேலதிகமாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மொறகொடவும், கனடா – இந்தியா மோதலில் இலங்கை, இந்தியாவின் பக்கம்தான் என்று குறிப்பிட்டிருந்தார். கனேடியப் பிரதமர் கடந்த மே 18 ஆம் திகதி தனதுரையில் இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே என்று தெரிவித்திருந்தார். அதற்கே இப்போது சந்தர்ப்பம் பார்த்து இந்தியாவுடன் இணைந்து அந்த நாட்டின் மீது சொற்தாக்குதல் நடத்தியிருக்கின்றது இலங்கை. ஆனால் இந்தியா ஒரு வல்லரசு. அது கனடாவை எதிர்த்தாலும் பெரிதாக எந்தவிதப் பாதிப்பும் அந்த நாட்டுக்கு நிகழப்போவதில்லை. ஆனால் இலங்கை அப்படியல்லவே. இன்னமும் தள்ளாடிக் கொண்டிருக்கும் பொருளாதாரநிலைமையை வைத்துக்கொண்டு கனடாவுடன் சண்டித்தனம் செய்வது, கல்லைக் கட்டிக்கொண்டு கடலில் விழுவதைப் போன்றது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிதான் இவ்வாறு நடந்துகொள்கின்றார் என்றால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கு ஒருபடி மேலே சென்று அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா இணைந்து கடந்த ஆண்டு உருவாக்கிய 'அக்குஸ்' என்ற ஒப்பந்தத்தை விமர்சித்திருக்கின்றார். இலங்கை, அணிசேராக் கொள்கையைப் பின்பற்றுகின்றது என்றும், இந்தியாவினதோ சீனாவினதோ பக்கம் இலங்கை இல்லை எனவும் குறிப்பிட்டுவிட்டு சீனாவுக்கு எதிரான மேற்கத்தைய நகர்வு என்று வர்ணிக்கப்படும் 'அக்குஸ்' ஒப்பந்தத்தை அமெரிக்காவில் வைத்து ஜனாதிபதி ரணில் விமர்சித்ததன் ஊடாக தனது சீன ஆதரவை வெளிக்காட்டியிருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கூற்றுக்கு அமெரிக்கா உடனடியாகவே எதிர்வினையாற்றியிருக்கின்றது. ஐ.நா. பொதுச்சபை அமர்வில் பங்கேற்கச் செல்லும் நாட்டின் தலைவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி இரவு விருந்துணவு வழங்குவதுடன், அமெரிக்க ஜனாதிபதியுடன் ஒளிப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக சில நிமிட நேரங்கள் அந்த நாட்டின் தலைவர்களுடன், அமெரிக்க ஜனாதிபதி உரையாடுவது வழமை. ஆனால் இம்முறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விருந்துபசாரமும், ஒளிப்படம் எடுக்கும் வாய்ப்பும் மட்டுமே வழங்கப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி பைடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதை வேண்டுமென்றே தவிர்த்திருந்தார்.இனிமேல் பொருளாதார உதவிகளிலும் அமெரிக்காவின் இந்தப் பாராமுகம் தொடர்வதற்கான சாத்தியங்களே அதிகம். பொருளாதார நெருக்கடியால் சர்வதேச சமூகத்திடம் தங்கியிருக்கவேண்டிய இலங்கை , அணிசேராக் கொள்கை என்ற கோட்பாட்டைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு சீனச்சார்புப் போக்கில் பயணிக்கின்றது. ஆனால் சீனாவோ இலங்கையைக் கடன்வலைக்குள் வீழ்த்தி, தனது பொருளாதார அடிமையாக மாற்றவே முயற்சிக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு இந்த மாத இறுதிக்குள் வந்திருக்கவேண்டிய நிலையில் அது எட்டாத் தூரத்துக்குச் சென்று கொண்டிருக்கும்போது, இலங்கையின் ஆட்சியாளர்களும் தமது வாய்களைச் சும்மா வைத்துக் கொண்டிராமல், இலங்கையின் எதிர்காலத்தைக் குழிதோண்டிப் புதைத்துக்கொண்டிருக்கின்றனர். நுணலும் தன் வாயால் கெடுவது போன்றே இலங்கையும் தன் வாயால் கெட்டுக்குட்டிச்சுவராகிக் கொண்டிருக்கிறது.

### நாளொரு நல்வார்த்தை

சுறுசுறுப்புடனும் ஆர்வத்துடனும்
செயற்படுகிறவனுக்குத்தான்
இந்த உலகம் சொந்தம்
– ரால்ப் வால்டோ எமர்சனன்



## கடன் மறுசீரமைப்புக் குழுவில் சீனா வருவதை விரும்பவில்லை

**கொழும்பு, செப். 29**

**இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புக் குழுவில் சீனா இடம்பெறுவதை இலங்கைக்கு கடன் வழங்கிய ஏனைய சில நாடுகள் விரும்பவில்லை என புளூம்பேர்க் சஞ்சிகை தெரிவித்துள்ளது.**

ஏனைய நாடுகள் பொறுமையிழந்து விட்டனவா அல்லது சீனாவுக்கு அழுத்தம் கொடுப்பதற்கா இந்த நடவடிக்கையை அவை எடுத்துள்ளன என்பது தெரியவில்லை எனவும் மேற்படி சஞ்சிகை தெரிவித்துள்ளது.

முக்கியமான கடன் வழங்குநர்களான அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் அடுத்த மாதம் மொரோக்காவில் வைத்து சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பவற்றுடன் இணைந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடவுள்ளது. இலங்கையின் மொத்தக் கடன் தொகையில் பத்து வீதம் சீனாவிடம் வாங்கிய கடன் தொகையாகும். ஆனால் சீனா இலங்கையுடன் தனிப்பட்ட ரீதியில் பேச்சு நடத்தி வருகிறது.

நாணய நிதியத்தின் அடுத்த கட்டக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை, சீனா உட்பட எந்தத் தரப்புகளுடனும் இணங்கிச் செல்லவே எதிர்பார்க்கின்றது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-6)

## 170,000 சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகை!

கொழும்பு, செப். 29

2023ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஓகஸ்ட் மாதம்வரை இந்தியாவில் இருந்து ஒரு இலட்சத்து 70 ஆயிரத்து 247 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இக்காலப்பகுதியில் ஜேர்மனில் இருந்து 61 ஆயிரத்து 623 சுற்றுலாப் பயணிகளும், பிரான்சில் இருந்து 41 ஆயிரத்து 243 பேரும், சீனாவில் இருந்து 39 ஆயிரத்து 186 பேரும் அவுஸ்திரேலியாவில் இருந்து 37 ஆயிரத்து 743 பேரும் இலங்கை வந்துள்ளனர்.

அத்துடன், இம்மாதம் முதல் 24 நாள்களில் மாத்திரம் 88 ஆயிரத்து 883 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (ம-44)

## வட மாகாண சுற்றுலா தினம் யாழ்ப்பாணத்தில் இன்று

யாழ்ப்பாணம், செப். 29

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வட மாகாண சுற்றுலா தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ளதாக வட மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் கடந்த 5 ஆண்டுகளாக உலக சுற்றுலா தினம் கடைப்பிடிக்கப்படவில்லை. நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலை, கொரோனாத் தொற்று என்பனவற்றால் அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

இந்த ஆண்டு சிறப்பான முறையில் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தின் வெளிப்புறத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை பல்வேறு கலைநிகழ்வுகள், காட்சிக்கூடங்கள் என்பவற்றைக் கொண்டு நடத்த இருக்கின்றோம் - என்றார். (ஒ-27)


**நாளை** 30.09.2023 சனிக்கிழமை புரட்டாதி 13

சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம் : 09.02 - 10.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலாளர்களுக்கு எதிராகச் சதிநடவடிக்கை

## யாழ். மீனவர்கள் குற்றச்சாட்டு!



**யாழ்ப்பாணம், செப். 29**

**கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் கடந்த 21ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டமொன்று, வடமாகாணக் கடற்றொழிலாளர்களின் பொருளாதாரத்தை அழிப்பதற்கான சதிமுயற்சியா? என்று யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் முன்னாள் உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.**

யாழ்ப்பாணம் வடமராட்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பட்ட திருத்தச்சட்ட வரைவு மாதிரிக் கையேட்டின் நடுவில் முக்கியமான சரத்துகள் இடம்பெற வேண்டிய பகுதிகள் அச்சிடப்படாது வெறுமையாக காணப்பட்டுள்ளன. இது தொடர்பில் சில பிரதிநிதிகள் கேள்வி எழுப்பிய போது சரியான விளக்கங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ஏற்பட்ட குழப்பநிலையை அடுத்து மீனவர் பிரதிநிதிகளது கோரிக்கைக்கு அமைவாக ஒன்றரை மாத அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு மீனவர்களது அத்துமீறலை தடைசெய்வது தொடர்பிலோ, தடைசெய்யப்பட்ட மீன்பிடித் தொழில்களை கட்டுப்படுத்துவது தொடர்பிலோ எவ்வித சரத்துகளும் இப்புதிய சட்டத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறு வெறுமையாக விடப்பட்ட வரைபை வடக்கு மீனவர்களிடம் காண்பித்து கலந்துரையாடலை நடத்திவிட்டு, பின்னர் மீனவர்களுக்கு விரோதமான சரத்துகளை சட்டத்தில் சேர்த்து, வடக்கு மீனவர்கள் இதற்கு ஒப்புதல் வழங்கியதாகக்காட்டி அதனை நிறைவேற்றும் மோசடித்தனமே இந்த அச்சிடப்படாத பக்கங்களின் மர்மமாகும்.

இக்கலந்துரையாடலுக்கு வடமாகாணத்தில் உள்ள கடற்றொழிலாளர் தரப்பினருக்கு முழுமையாக அறிவிக்காது, மோசடிக்கு இசைந்துபோகும் சில தரப்பினர் மட்டுமே அழைக்கப்பட்டுள்ளனர். சம்மேளனத்தின் பொறுப்பில் உள்ளவர்கள் தமது பதவிகளைத் தக்கவைப்பதற்காக வடக்கு மாகாண மீனவர்களது வாழ்வாதாரத்தை அழிக்கும் இந்த மோசடிகளுக்கு துணைபோகின்றனர் - என்றார். (ம-27,100)



## முதலுதவித் தொண்டர்களுக்கு நல்லூர்க் கோயிலில் கௌரவம்

யாழ்ப்பாணம், செப். 29

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவில் சேவையில் ஈடுபட்ட இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர்சபையின் தொண்டர்களுக்கு சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வு, நல்லூர் சிவகுரு ஆதீன மண்டபத்தில் சிவகுரு ஆதீன குருமுதல்வரும் இலங்கை முதலுதவிச் சங்கம் இந்து சமயத் தொண்டர் சபையின் ஆலோசகருமான தவத்திரு வேலன் சுவாமிகள் முன்னிலையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர்சபையின் தேசிய ஆணையாளர் வை. மோகனதாஸ், அமைப்பின் தேசிய கண்காணிப்பாளர் கலாநிதி ஜெகதாஸ், மகளிர் பிரிவுக் கண்காணிப்பாளர் செல்வி நிலாமதி, மகளிர் பிரிவு பொறுப்பாசிரியர் திருமதி கேதீஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டனர். இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் கலை பண்பாட்டுப் பிரிவினரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-27)



## தொழில் ஊக்குவிப்பு பொருள் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 23 இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில் ஊக்குவிப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில்க கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

சி.எவ்.சி.டி. நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் இந்த தொழில் முயற்சி உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-9)

## மணியம்தோட்டத்தில் கண்காட்சி

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் வழிநடத்தலில் மணியம்தோட்டம் ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் கீழ் இயங்கும் 'இணைந்த கரங்கள்' நடத்தும் ' எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்' என்னும் கண்காட்சி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை மணியம்தோட்டம் இரண்டாம் குறுக்குத் தெருவில் நடைபெறவுள்ளது.

கண்காட்சியில் யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்கள், இலங்கையின் சர்வமத இனமக்களும் அவர்களின் உணவுப் பழக்கங்களும், எதிர்கால சமூகம் மறந்துபோகும் பழைய காலத்துப் பாவனைப் பொருள்கள் உட்பட பல்வேறு வகையான சிறப்பம்சங்கள் இடம்பெறுகின்றன. இவற்றுடன் மணியந்தோட்ட மண்ணில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விற்பனைக்கூடம், மகிழ்வூட்டும் விளையாட்டுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. சிறுவர்களையும், இளைஞர்களையும், பெண்களையும் முதன்மைப்படுத்தி அவர்களின் திறன்களை வெளிக்கொண்டு வரும் வகையில் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ஒ.இ)

## சுற்றாடல் பிரச்சினைகள்

### ஆராய்வு அமர்வு

கொழும்பு, செப். 29

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் 5 ஆவது கலந்துரையாடல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆசிய பசுபிக் பிராந்திய அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகளின் பங்கேற்பில் எதிர்வரும் ஒக்ரோபர் 3ஆம் திகதி தொடக்கம் 6ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இம்முறை கலந்துரையாடலில் ஆசிய பசுபிக் வலயத்தின் 41 நாடுகளின் அமைச்சர்கள், 300க்கும் அதிகமான வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் 100க்கும் அதிகமான தொழில்வாண் மையாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

நிலையான பலதரப்புச் செயற்பாடுகளை கருத்தில் கொண்டு, காலநிலை அனர்த்தங்கள், உயிரியல் பல்வகைத் தன்மை அழிவு மற்றும் சுற்றாடல் பாதிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளு க்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பாக இந்தக் கலந்துரையாடல் அமையும்.

இந்தக் கலந்துரையாடலின் ஆறாவது அமர்வை அடுத்த வருடம் பெப்ரவரி 24 தொடக்கம் மார்ச் 01 ஆம் திகதி வரை நைரோபில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் சுற்றாடல் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)



## திருமண நிகழ்வில் தீ; 115 பேர் உயிரிழப்பு!

### ஈராக்கில் துயரம்

பக்தாத், செப். 29

ஈராக்கில் திருமண நிகழ்வு ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 115 பேர் உடல்கருகி உயிரிழந்தனர். 150க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

ஈராக் நாட்டின் நினேவா மாகாணத்தில் உள்ளது ஹம்தானியா என்ற பகுதி. பக்தாத் நகரத்தில் இருந்து சுமார் 335 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இப்பகுதியில் கிறிஸ்தவர்கள் அதிகளவில் வசிக்கின்றனர். அங்குள்ள புகழ்பெற்ற திருமண மண்டபத்தில் இடம்பெற்ற கிறிஸ்தவ திருமண நிகழ்வின்போதே இந்த இடர் ஏற்பட்டுள்ளது. 103 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகியும் மூச்சுத்திணறலாலும் உயிரிழந்தனர். சுமார் 150 பேர் படுகாயமடைந்த நிலையில் அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் குர்திஸ்தான் போராளிகள் பகுதியளவில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். மீட்புப் பணிகளில் அவர்களும் ஈடுபட்டுள்ளனர். இதனால் பொதுப்புரிதலின் அடிப்படையில் போர் நிறுத்த ஒப்பந்தமும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயுதப்போராட்டம் மௌனித்தாலும் தமிழர் விடுதலை வேட்கை தொடரும்

## திலீபன் கூற்று மெய்ப்படுகிறது – ரவிகரன் ஆணித்தரம்

முல்லைத்தீவு, செப். 29

**தமிழர்களின் விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப்போராட்டம் முப்பது வருடங்களின் பின் மௌனிக்கப்பட்டபோதும், தமிழர்களின் விடுதலைக்கான பயணம் நினைவேந்தல்கள், ஜனநாயக வழி ஆர்ப்பாட்டங்கள் மூலம் எழுச்சியைத் தொடர்கிறது. 'போராட்ட வடிவங்கள் மாறலாம், இலட்சியம் மாறாது' என்ற தியாகி திலீபனின் கூற்று இதன் மூலம் மெய்ப்பிக்கப்படுகிறது.**

- இவ்வாறு முல்லைத்தீவு சுதந்திரபுரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தியாகதீபம் திலீபனின் 36ஆவது நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றுகையில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு காலத்தில் அகிம்சை என்றால், அது மகாத்மா காந்தி என இந்தியா மார்தட்டிக்கொண்டிருந்தது. அதே இந்தியாவின் அடக்குமுறைகளைப் பொறுத்துக் கொண்டு, இந்தியா தீர்வுகளைப் பெற்றுத்தரும் என்ற எண்ணத்துடன், தியாகதீபம் திலீபன் எமக்காக, அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்து நீராகாரம் ஏதுமின்றி உடலை உருக்கி தன்னுயிரைத் தியாகம் செய்தார். அவரின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் இம்முறை தாயகத்தில் எழுச்சிபெற்றுள்ளது. அடுத்த தலைமுறையினர் பலரும் தாமாக முன்வந்து தியாக தீபம் திலீபனை நினைவேந்துவதையும், அஞ்சலிகளைச் செலுத்துவதையும் காணும்போது வேட்கை துளிர்க்கிறது. தமிழர்களுக்கான விடுதலைப் பயணத்தில் முப்பது வருடகால போர் மௌனிக்கப்பட்டு நாம் வீழ்ந்துவிட்டதாக நினைக்கிறார்கள். இவ்வாறான நினைவேந்தல்கள் மூலமும், போராட்டங்கள் மூலமும் நாம் மீண்டெழுவோம் என்பதைத் தமிழர்கள் காண்பித்து வருகிறார்கள். 'போராட்ட வடிவங்கள் மாறலாம், இலட்சியம் மாறாது' எனத் திலீபன் அன்று சொல்லியதற்கு இன்றும் தமிழ் மக்கள் வடிவம் கொடுத்துவருகின்றார்கள்- என்றார். (ச-246)

## பரிசளிப்பு நிகழ்வு

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை அதிபர் ஐ.தேவராஜ்வரன்தலைமையில்நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்வித்திணைக்கள (விஞ்ஞான பாட) பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிரூபராணி அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. மதிதரன் ஆகியோர் பங்கேற்றனர். மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதை தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-159)



## மின்தடை

யாழ்ப்பாணம், செப். 29

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோகமார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்சாரம் தடைப் படும் என இலங்கை மின்சாரசபை அறிவித் துள்ளது.

அதற்கமைய யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கொழும்புத்துறை வீதி, கொன்வென்ட் - பிரதான வீதி, பழைய பூங்கா வீதி, பாசையூர் ஈச்சமோட்டை மூர்வீதி, பெரிய கோயில், புங்கன்குளம், கொழும்புத்துறை வீதி வல்லான், ஆலயச் சந்தி, இறுப்பிட்டி, கேரைதீவு, குறிகாட்டுவான், மடத்துவெளி, நடுவுக்குறிச்சி, புங்குடுதீவு, அரசடிச் சந்தி மயிலியதனை, சிதம்பராக் கல்லூரி ஆகிய இடங்களில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கொக்குவிலில் குருதிக் கொடை

யாழ்ப்பாணம், செப். 29

கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையமும், கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய குருதிக் கொடை முகாம் கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலர் இந்தக் குருதிக்கொடை முகாமில் ஆர்வத்துடன் பங்கெடுத்தனர். (ம-66)



# பிரான்ஸ் தூதுவர் பக்றெற் யாழ். பல்கலைக்குப் பயணம்

கொழும்பு, செப்.29

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ஃப்ராங் கோஸிஸ் பக்றெற் தலைமையிலான குழு ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குண ராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள பிரான்ஸ் தூதுவர் தலைமையிலான குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றிருந்தனர்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ஃப்ராங்கோஸிஸ் பக்றெற், கலாசார ஒத்துழைப்புக்கான துணைத் தூதுவர் ஒலிவியா பெலீமியர் மற்றும் பிரான்ஸ் தூதரகத்தின் ஊடகத் தொடர்பாடல் அதிகாரி டினுசா இலப்பெருமா ஆகியோர் அடங்கிய குழுவினரே யாழ்ப்பாணம் வந்திருந்தனர். இந்தக் குழுவினர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். சமகால விடயங்கள் மற்றும் பிரான்ஸ் தூதரகத்தினூடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்படும் கற்றல் மற்றும் ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களின் மீளாய்வு தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## கிளிநொச்சி இளையோருக்கு இலவசக் கற்கைகள் ஆரம்பம்

கிளிநொச்சி, செப். 29

கிளிநொச்சி மாவட்டச் செயலக மனிதவலு வேலைவாய்ப்பு அலகினர் மாவட்டத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற இளையோருக்கு விருந்தோம்பல் மற்றும் முகாமைத்துவப் பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

இலங்கை சுற்றுலாத்துறை, விருந்தோம்பல் மற்றும் முகாமைத்துவ நிறுவனத்தினரால் இந்தப் பயிற்சிநெறி எதிர்வரும் ஒக்ரோபர் 2 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை கிளிநொச்சி திறன்விருத்தி பயிற்சி மையத்தில் நடத்தப்படவுள்ளது. பயிற்சிநெறியில் பங்கேற்போர் மாவட்டச் செயலக மனிதவலு வேலைவாய்ப்பு அலகினருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)



சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் சத்தியப் பிரமாணம் இடம்பெற்றது. (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 20.09.1938

உதிர்வு 01.09.2023

கடந்த (01.09.2023) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## சின்னத்தம்பி சதாசிவம்

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

அப்பா கண்முன்னே வாழ்ந்தகாலம்
கனவாகிப் போனாலும் எம் முன்னே உன் முகம்
எந்நாளும் உயிர்வாழும் மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும் கண்விட்டு மறையாமல்
எம் உள்ளே நீங்கள் எந்நாளும் உயிர்வாழ
இறைவா நீயே வரம் தர வேண்டும்.

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (29.09.2023) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அன்றைய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.


**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

குறுமுனி அம்மன் கோயில் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(CR40676) (N.1)

குடும்பத்தினர்
076 977 8244

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 . 05 . 1927

மறைவு 09 . 10 . 2022

## அமரர் ஆறுப்பிள்ளை பொன்னுச்சாமி

அன்போடு அரவணைத்து
ஆசையாய் அறிவுரைகள் கூறி
எமையெல்லாம் ஏற்றமுடன்
வாழ வைத்த ஐயாவே!
எந்நாளும் எம்மோடு இருந்த நீங்கள்
எம்மைவிட்டு எங்கு சென்றீர்கள்
ஆண்டு ஒன்று சென்றாலும்
எம் இதயத்தில்
என்றும் வாழ்வீர்கள் ஐயா!

'இலட்சுமிவாசம்'
குமரகோட்டம், கோண்டாவில்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 26402) A-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 01 . 06 . 1949

இறப்பு 28 . 09 . 2023

## திருமதி தவலிங்கம் புஷ்பகாந்தி

கொழும்பை பிறப்பிடமாகவும் டச் வீதி, உடுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவலிங்கம் புஷ்பகாந்தி அவர்கள் நேற்று (28.09.2023) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - நாகரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தவலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவசோதிநாதன், ஜெயராணி, ஜெகநாதன் (லண்டன்), பஞ்சலோகினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரியா (பிரதேச செயலகம், தெல்லிப்பளை), நிருண் (நிரு மோட்டோர்ஸ்-இணுவில்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்சன், டர்சிகா ஆகியோரின் அன்பு மாமியும், தருணிகா, அக்ஷயா, அட்சரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தொடர்பு - 077 9184 500 (மகன்)**
**077 7640 588 (மருமகள்)**

தகவல்:
குடும்பத்தினர்

(CS26400) A-1

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 08 • 10 • 1941

மறைவு 27 • 09 • 2023

## சண்முகம் சரவணமுத்து

(சிரேஸ்ட தொலைக் கல்வி போதனாசிரியர், ஆசிரிய ஆலோசகர், கல்வித் திணைக்களம்)

ஆத்மார்த்தமாக ஒரு நட்பு,
அன்பொன்று தான்
மனித அடையாளம் என்று,
அவசரமான உலகத்தில்
அதிசயமான மனிதர்கள் நடுவே!
காத்திரமான எண்ணங்கள்
கனதியான நினைவுகளுடன்
வாழ்வாங்கு வாழ,
கற்றலும் வேண்டும் கற்றபடி
நிற்றலும் வேண்டும்,
எடுத்த செயல் முடிக்கும்
ஆற்றலுடன், மன உறுதியும் சேர்த்து!!
மனிதர்கள் கை கோர்த்தால் மாசற்ற
நன்மை விளைய வேண்டும்,
ஒருவருக்கொருவர்
உறுதுணை ஆதலால்
மனிதகுலம் தழைக்க வேண்டும்,
உன் உள், உறுதி கொள், யாவும் கடந்திட!!!

உயிர் வாழ்ந்த
நாளெல்லாம்
குருஷேத்ரம்,
என வாழ்ந்த தூய
ஆத்மா,
மீளாத் துயில் கொள்கிறது
அமைதி பெற!!!!

**அஞ்சலிக்கின்றோம்!**
**பிரார்த்திக்கின்றோம்!!**
**ஆறுதல் சொல்வதற்கு**
**வார்த்தைகள் தேடுகின்றோம்!!!**
**மனிதர்களால் இயன்ற**
**காணிக்கை இவ்வளவுதானென்று**
**மலர் சொரிகின்றோம்!!!!**

*ஓம் சாந்தி.. சாந்தி.. சாந்தி..*

அயலவர்கள் நண்பர்கள் சார்பில்,
து.மனோகரன்,
10/03, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் எம்.பிக்கள் அனைவரும் நாடாளுமன்றை புறக்கணிக்குக

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வலியுறுத்து

தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்க முடியாத நாட்டின் சட்டவாக்க சபையான நாடாளுமன்றை ஒட்டுமொத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் புறக்கணிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மிக உன்னதமான நீதித்துறையில் தலைசிறந்த அஞ்சா நெஞ்சுரத்துடன் குருந்தூர்மலை சட்டவிரோத பௌத்த கட்டுமானம், உள்ளிட்ட விவகாரங்களில் யாருக்கும் அடிபணியாமல் தீர்ப்புகளை வழங்கிய முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா அழுத்தங்களால் பதவிவிலக நிர்ப்பந்திக்கப்பட்டு உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டுவெளியேறியுள்ளமை தமிழர்களைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. இது இந்த நாட்டின் நீதிப்பொறிமுறையையேகேள்விக்குறி ஆக்கியுள்ளது.

குருந்தூர் சட்டவிரோத பௌத்த கட்டுமானம் தொடர்பாக நீதியான தீர்ப்பு வழங்கியமைக்காக தொடர் அழுத்தம், உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகி முல்லைத்தீவு நீதிபதி பதவியைத் துறக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நீதிபதி சரவணராஜாவின் நேர்மையைப் போற்றும் வகையில் தமிழ்ச் சமூகமாக ஆதரவை வெளிப்படுத்துவதுடன் அவரின் இந்த முடிவுக்குக் காரணமான அழுத்தங்களைப் பிரயோகித்த சகல தரப்பினர் மீதும் நடவடிக்கை எடுக்கும் வரை தமிழர் சார்ந்த அனைத்துக் கட்டமைப்புக்ளும் குறிப்பாக சட்டவாளர்கள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பிக்கவும் வேண்டுகின்றோம்.

இலங்கையின் சகல முற்போக்கு சக்திகளும் சர்வதேசமும் ஐ.நா. அமைப்புகளும் நீதியை வழங்கும் நீதிபதிக்கே ஏற்பட்டுள்ள இந்த பாரதூர நிலையைச் சீர்செய்ய, நீதி பரிபாலனம் சுயாதீனமாக இயங்க உச்சபட்ச நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (ம-125)

# செங்கோலை வளைக்கலாம் என்போருக்குச் சாட்டையடி!

மறவன்புலவு சச்சிதானந்தன் கருத்து

யாழ்ப்பாணம், செப். 29



போர்வெற்றி வீறாப்பில், ஆயுதக் குவிப்பின் எக்காளத்தில் நீதியை உடைக்கலாம், செங்கோலை வளைக்கலாம் என்போருக்குச் சாட்டையடி கொடுத்திருக்கிறார் நீதிபதி சரவணராஜா. வாழ்க அவர் துணிச்சல் என இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று இரவு வெள்ளிக்கிழமை ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

சங்கு சுட்டாலும் வெண்மை தரும். கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே. மாவட்ட நீதிபதி சரவணராஜா மேல் மகன். பொருளை ஒறுத்தார். பதவியை ஒறுத்தார். வசதிகளை ஒறுத்தார். வாழும் சூழலை ஒறுத்தார். கொள்கை வழி நிற்கிறார்.

தீர்ப்பை மாற்றி எழுதச் சொல்லி யாரைக் கேட்கிறாய்?, அநீதிக்குத் தலை வணங்குவேன் என நினைத்தாயோ?, அரசியல் அழுத்தங்களுக்காகச் சட்டத்தைப் புரட்டுவேன் என நினைத்தாயோ? அடிமை வாழ்க்கை என்றாலும் ஆணித்தரமான கொள்கை வாழ்க்கை வாழ்கின்றேனடா. போ.. போ.. நீயும் நீ தந்த பதவியும், நீ தந்த வாழ்க்கையும். உதறித் தள்ளிய ஆண்மகன் நீதிபதி சரவணராஜா. மனிதத்தின் மறுபிம்பம் நீதிபதி சரவணராஜா.

போர்த்துக்கேயர் ஆட்சியில் பசுவைக் கொன்று இறைச்சியைத் தரேன், கிறித்தவனாக மதம் மாறேன் என்ற ஆண் மகன் அன்றைய ஞானப்பிரகாசரின் வழிவந்தவர் இன்றைய நீதிபதி சரவணராஜா. அன்று கத்தோலிக்கரிடம் அடிமையாக இருந்தோம். இன்று புத்தர்களிடம் அடிமையாக இருக்கிறோம்.

நீறுபூத்த நெருப்பாக, ஊதினால் தீயாகும் தணலாக, விடுதலை வேட்கை உள்ளத்தில் கரந்துறைவதன் அடையாளங்கள் அன்றைய ஞானப்பிரகாசரும், இன்றைய சரவணராஜரும். ஞானப்பிரகாசர்களையும் சரவணராஜாக்களையும் இடையீடின்றி உருவாக்கும் இலங்கைச் சைவத்தமிழ்ச் சமூகம் - என்றுள்ளது. (ம-66)



# தனுஷ்க விடுதலை

சிட்னி, செப். 29

அவுஸ்திரேலியாவில் பாலியல் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்த தனுஷ்க குணதிலக, குற்றமற்றவர் என்று நீதிமன்றம் நேற்று அறிவித்ததுடன், அவர் அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டார்.

2022ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெற்றது. இந்தத் தொடருக்கான இலங்கை அணியில் இடம்பிடித்திருந்த தனுஷ்க குணதிலக, செயலி ஒன்றில் அறிமுகமான யுவதியொருவருடன் உல்லாசமாக இருந்துள்ளார். உடலுறவு கொள்ளும்போது தனக்குத் தெரியாமல் ஆணுறையை அகற்றி பாதுகாப்பற்ற வகையில் தனுஷ்க உடலுறவு கொண்டார் என்று அந்தப் பெண் குற்றஞ்சாட்டியதையடுத்து தனுஷ்க கைதுசெய்யப்பட்டார். இதையடுத்து தனுஷ்கவுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டதுடன் அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியேற தனுஷ்கவுக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்த வழக்கின் விசாரணைகள் நிறைவுற்று நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன்போது தனுஷ்க குற்றமற்றவர் என்று அறிவிக்கப்பட்டது. தனுஷ்கவுடன் உறவுகொண்ட யுவதி குற்றஞ்சாட்டியதைப்போன்று 'தொடர்ச்சியான உடலுறவின்போது ஆணுறை அந்த யுவதிக்குத் தெரியாமலேயே அகற்றுவது யதார்த்தத்துக்கு முரணானது' என்ற அடிப்படையிலேயே தனுஷ்க விடுவிக்கப்பட்டார். (அ-ம)





## கவனத்தை...

கவனத்தை வெகுவாகவே ஈர்த்தது. வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி, துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது. தேர் வலம்வந்தபோது இளம் குடும்பப் பெண்மணி ஒருவர் வித்தியாசமான முறையில் 20 கற்பூரச் சட்டிகளை ஒரே தடவையில் ஏந்தியவாறு நேர்த்திக் கடனை நிறைவேற்றினார். இது உணர்வுபூர்வமானதாகவும் பலரது கவனக்குவிவைப் பெற்றதாகவும் அமைந்தது. (அ-ம-66)

## சர்சைக்குரிய...

வரைவு என்பன எதிர்வரும் 3ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

ஒக்ரோபர் மாதத்துக்குரிய முதல்வார நாடாளுமன்ற கூட்டத்தொடர் 3ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதன்போது மேற்படி இரு சட்டவரைவுகளும் நீதி அமைச்சரால் முன்வைக்கப்படவுள்ளன என்று தெரியவருகின்றது.

இவ்விரு சட்டவரைவுகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பின்னர், சட்டவரைவுகள் குறித்து ஆட்சேபனை இருந்தால் தரப்புகள் உயர்நீதிமன்றத்தை நாடலாம். நிச்சயம் உயர்நீதிமன்றத்தை நாடுவோம் என எதிரணிகளும், சிவில் அமைப்புகளும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-44)


## குருக்கள் தேவை

கொழும்பு 13 ஜிந்துப்பிட்டி
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு
குருக்கள் தேவை.
தங்க வீடு வசதியும், தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.
விண்ணப்பிக்கவேண்டி முகவரி:
98, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு - 13
T.P.: 072 222 3340,072 244 7606, 077 726 1777
Email: muruganginthupitiya@gmial.com
(cs 25048) (N.1)



## கொழும்புத்துறை மணலியம்பதி அம்மன் ஐயனார் ஆலயத் திருப்பணி வேலைக்கான கூறுவிலை கோரல்

மேற்படி ஆலயம் பாலஸ்தானக் கும்பாபிஷேகம் செய்யப்படவிருப்பதால் செய்யப்பட வேண்டிய திருப்பணிகள் சம்பந்தமான விடயங்கள் அடங்கிய விண்ணப்படிவத்தினை செயலாளர், ஆலயபரிபாலனசபை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நேரடியாகப் பெற்றுக்கொண்டு எதிர்வரும் 07.10.2023 பிற்பகல் 4.30 மணிக்கு முன்னதாக ஒப்படைக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தொடர்பு:
077 759 2653
077 201 9480
077 381 7426
077 698 0346
077 210 5379

ஆலய பரிபாலன சபை
(cs.52308) (N.1)


# தர்ம முழக்கம் இன்று

கிளிநொச்சி, செப். 29

கிளிநொச்சி,தருமபுரம் மத்திய கல்லூரி மற்றும் முழங்காவில் மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு இடையிலான 6ஆவது தரும முழக்கம் கிரிக்கெட் ஆட்டம் முழங்காவில் மகா வித்தியாலய மைதானத்தில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.

இதுவரை நடைபெற்ற 5 ஆட்டங்களில் தருமபுரம் மத்திய கல்லூரி 4 ஆட்டங்களிலும், முழங்காவில் மகா வித்தியாலயம் ஓர் ஆட்டத்திலும் வெற்றி பெற்றுள்ளன. 2015ஆம் ஆண்டு ஆரம்பித்த இந்தக் கிரிக்கெட் தொடர் 2020, 2021, 2022 ஆண்டுகளில் நாட்டின் சுமுகமற்ற நிலையால் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-13)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தரங்கு



குப்பிழான் விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் குப்பிழான் விக்கினேஸ்வரா கனடா மன்றத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு மாணவர்களுக்கான விசேட இலவசக் கருத்தரங்கு அண்மையில் மேற்படி நிலைய மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதேவேளை, குறித்த கருத்தரங்கு தொடர்ச்சியாக வார இறுதிநாளில் நடத்தப்படவுள்ளது என தலைவர் இ.மகேஸ்வரராஜ் தெரிவித்தார்.

(ய-66)



யாழ்ப்பாணம் குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில்அறநெறிச் சொற்பொழிவும் கூட்டுப் பிரார்த்தனையும் அண்மையில் நடைபெற்றது.

(ய-66)



தலைமன்னார் புனித லோறன்சியாரின் வருடாந்த பெருவிழா மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையின் தலைமையில் அண்மையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

(ய-60)



வரலாற்று சிறப்பு மிக்க கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர் திருவிழா அண்மையில் இடம்பெற்றது.

(ய-113)



நவரட்ணம் லக்ஷ்சுமியின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியில் அமைந்துள்ள சிறகுகள் இலவச கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மதிய போசனம் அண்மையில் வழங்கப்பட்டன.

(ய-20-27)



கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தீர்த்த உற்சவம் அண்மையில் இடம்பெற்றது.

(ய-113)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் வாராந்த நிகழ்வின் இன்னிசை விருந்து அண்மையில் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.

(ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டைவிட்டு...

செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதியிட்ட கடிதம் மூலமாக அவர் தனது முடிவை நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

தனது பதவி விலகல் தொடர்பில் வெளிநாடொன்றில் இருந்து அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலை வழக்கில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் எனக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரமற்றும்பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் எனக்கு அச்சுறுத்தல்கள் விடுத்துள்ளனர். அண்மையில் எனக்கான (நீதிபதிக்கான) பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்ட அதேவேளை, புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக என்னைக் கண்காணித்து வந்தனர்.

சட்டமா அதிபர், என்னை தனது அலுவலகத்தில் சந்திக்க வருமாறு கடந்த 21ஆம் திகதி அழைத்தார். இதன்போது குருந்தூர்மலை வழக்கின் நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்கும்படி அழுத்தம் பிரயோகித்தார். குருந்தூர்மலை வழக்குடன் தொடர்புபடுத்தி எனக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் எனது தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில் எனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக நான் மிகவும் நேசித்த எனது நீதிபதிப் பதவியைத் துறந்துள்ளேன். இது குறித்த பதவி விலகல் கடிதத்தினை கடந்த 23ஆம் திகதி பதிவுத் தபால் ஊடாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளேன் என்றுள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் தஞ்சமடைந்த நாட்டின் விவரம் வெளியிடப்படவில்லை. (அ-ம-100-26)

## அரசாங்கத்தினுடைய...

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதிக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல்கள் இந்த அரசாங்கத்தின் கோரமுகத்தையே காட்டுகின்றன என்று வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி அரச அழுத்தத்தாலும் அச்சுறுத்தலாலும் பதவி துறந்த விவகாரத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு நாட்டின் உயரிய நீதிபதிக்கு இந்த நாட்டில் இருக்கக்கூடிய மதிப்பையும் பாதுகாப்பையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.சரவணராஜாவுக்கு நேர்ந்த நிலை நன்றாகவே கட்டியம் செய்கின்றது. அரசாங்கத்தின் கோரமுகம் எத்தகையது? சிறுபான்மை மக்களுக்கு எதிராகஅரசாங்கம்கொண்டுள்ளமனோ நிலை எத்தகையது? என்பதைத்தான் இந்தச் சம்பவங்கள் எண்பிக்கின்றன. சரத் வீரசேகர போன்ற கடைந்தெடுத்த இனவாதிகள் வெளிப்படுத்திய இனவாதக் கருத்துகளின் பிரதிபலிப்பையே நாம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். நீதித்துறை மீதான அரசாங்கத்தின் அத்துமீறல்களுக்கு எதிராகவும் நீதிபதிக்கு நீதி கோரியும் முல்லைத்தீவில் விரைவில் தீவிரமான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-ம-26)

## நீதியை...

அரச நிறுவனங்களும் முன்னெடுக்க வேண்டும். அதிலிருந்து விலக்காக நீதியை நிலைநாட்டுவதற்கு நீதிபதி ஒருவர் செயற்பட்டால் அவ்வாறு செய்வதற்கு இலங்கையின் சிங்கள - பௌத்த பேரினவாத கட்டமைப்பு இடம்கொடாது என்பதற்கு ஆகப்பிந்திய உதாரணம்தான் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவின் வெளியேற்றம் - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகியமை தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குருந்தூர்மலையில் தமிழ் மக்கள் தங்கள் வழிபாட்டுரிமையை நிலைநாட்டப் போராடி வருகின்றனர். நீதிக்கான அந்தப் போராட்டத்தில் தமிழ் மக்கள் நம்பியிருந்தது நீதிமன்றத்தைத்தான். முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா, இலங்கை சட்டத்துக்குட்பட்டு தமிழ் மக்களின் வழிபாட்டுரிமையை உறுதிப்படுத்தியிருந்தார். குருந்தூரில் விகாரை அமைக்கப்படக்கூடாது என்பதையும், அதையும் மீறி அமைக்கப்பட்டபோது அதை இடிக்கவேண்டும் என்பதையும், அதன்பின்னர் முன்னைய நிலையில் விகாரையைப் பேணுமாறு பணித்ததையும், இது தொடர்பில் நேரடியாக ஆய்வு செய்யச் சென்ற நீதிபதியை, நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தலையிட்டு இடையூறு செய்தமையும், அதன் தொடர்ச்சியாக நாடாளுமன்றம் என்ற சிறப்புரிமை கவசத்துக்குள் நின்று நீதிபதி ரி.சரவணராஜா மீது தனிப்பட்ட தாக்குதல் தொடுத்தமையும் அதிலும் தமிழ் நீதிபதி என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி வீரசேகர உரையாற்றியமையும் கடந்த காலத்தில் நடந்தேறியவை. ஒரு தடவை அல்ல இரண்டு தடவைகள் சரத் வீரசேகர இவ்வாறு உரையாற்றியிருந்தார்.

நீதியின்பால்பட்டு துணிச்சலாக நீதிபதி ஒருவர் செயற்படும்போது சிங்கள - பௌத்த பேரினவாதம் எவ்வாறு சினம் கொள்ளும் என்பதற்கு இது சிறந்த எடுக்காட்டு. இதுதான் இலங்கை அரசாங்கத்தினதும் அதன் நிறுவனங்களினதும் கொள்கை. சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்கு எதிராக எவர் செயற்பட்டாலும் அவர்களைத் தூக்கி மிதிப்பதற்கு சிங்கள தேசம் தயங்காது என்பதற்கு வீரசேகரவின் குரலும் அந்தக் குரலுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையோ கண்டிப்போ விடுக்காத சிறிலங்காவின் அரசாங்க கட்டமைப்பும் மிகப் பொருத்தமான உதாரணம்.

இலங்கையில் கட்டமைக்கப்பட்டுள்ள பௌத்த - சிங்கள சித்தாந்தத்திலிருந்து அதன் அரச நிறுவனங்கள் வெளிவரப் போவதுமில்லை. தனிநபராக அதற்குச் சவால் விடுத்தால் நீதிபதி சரவணராஜாவின் கதியே நேரும் என்பதுதான் அவர்களின் எச்சரிக்கை.

நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தலால் நாட்டிலிருந்து வெளியேறிமையை தனித்து ஒரு சம்பவமாக நோக்காமல் இலங்கையின் அரச நிறுவனங்கள் சிங்கள - பௌத்த சித்தாந்தத்துக்கு முரணாக இயங்க முடியாதுள்ளதையும் அது எவ்வளவு தூரம் பல்வகைமை உள்ள நாட்டில் பாதிப்பு என்பதையும் சர்வதேச சமூகம் உணர்ந்துகொள்ளவேண்டும் - என்றுள்ளது. (அ-ம-125)

## சவாலுக்குட்படுகின்றது...

யாகப் பிரயோகிக்கப்பட்டுவந்த அழுத்தங்கள் மற்றும் உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக, தனது பதவியையும், பொறுப்புகளையும் துறந்துள்ளமை, இந்த நாட்டின் நீதித்துறையினது சுயாதீன இயங்குநிலையை அடியோடு ஆட்டம் காணச் செய்துள்ளது என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதிபதி சரவணராஜா கடந்த ஜூலை மாதம் 4ஆம் திகதி தனது கடமை நிமித்தம் குருந்தூர்மலைக்கு பயணம் செய்திருந்தபோது தெரிவித்த கருத்துகளை மேற்கோள்காட்டி ஜூலை 7ஆம் திகதிய நாடாளுமன்ற உரையிலும், அதன்பின்னர் பொதுவெளியிலும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை, நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர அவதூறுக்கு உள்ளாக்கியிருந்தார்.

அதன்பின்னர் குருந்தூர்மலையில் தமிழர்கள் வழிபாடியற்றுவதற்கு, சட்டவரைமுறைகளுக்கு உட்பட்டு நியாயபூர்வமாக வழங்கப்பட்ட தீர்ப்பினை மாற்றம் செய்யுமாறு சட்டமா அதிபர் மட்டத்தில் பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் மற்றும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி விலகியுள்ளமை இந்த நாட்டின் நீதித்துறைக்கும், ஜனநாயகத்துக்கும் விழுந்திருக்கிற சாட்டையடிமட்டுமல்ல, இதைமிகமோசமான இனவாதச் செயலாகவே கருதவேண்டியுள்ளது. இதற்கு, எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கிறேன்.

2000ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக இருந்த திருமதி சிறீநிதி நந்தசேகரன் மீது, இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியை அடியொற்றி, மீளவும் வடக்கின் தமிழ் நீதிபதி ஒருவர்மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இத்தகையதொரு உயிர் அச்சுறுத்தல், இலங்கையின் நீதித்துறையின் இயங்குநிலையையும் மெல்லமெல்ல இராணுவ மயப்படுத்தப்படுவதற்கான எத்தனமாகவே தென்படுகிறது.

நீதித்துறையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் இந்த நாட்டில், இன, மத ஆக்கிரமிப்புகளும், அடக்குமுறைகளும் எத்தனை வீரியமாக இருக்கும் என்பது பற்றி, சர்வதேச சமூகம் இனியேனும் கூருணர்வோடு செயலாற்றவேண்டும் என்றும், இத்தகையதொரு நிலை, இன்னுமோர் தமிழ் நீதிபதிக்கு ஏற்படாதிருக்க வழிவகை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (அ-ம-26)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி ரணில் மூலம் சில காரியங்களைச் செய்விக்கலாம் என்ற நம்பிக்கையுடன் பேசி வருகின்றோம். பதிமூன்றாம் திருத்தத்தின் மூலம் மாகாணசபைகளிடம் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள மாகாணங்களுக்கு வழங்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்ச்சியாகப் பேசி வருகிறோம் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கு 13ஆவது திருத்தம் செயற்படுத்தப்படவேண்டும். இதனைக் கருத்திற்கொண்டு மாகாணசபைகளிடமிருந்து மத்திக்குப் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள மாகாணத்துக்கு வழங்குவது தொடர்பிலும் நியதிச் சட்டங்களை உருவாக்குவது தொடர்பிலும் ஜனாதிபதியுடன் பல சுற்றுச் சந்திப்புக்களை மேற்கொண்டோம்.

நாம் சந்திப்புகளில் ஈடுபட்டபோது ரணில் தமிழ் மக்களுக்கு ஒன்றும் செய்யமாட்டார் என சிலர் கூறினர். ஆனால் நாங்கள் சில விடயங்களை அவர் ஊடாகச் செய்விக்கலாம் என்ற நம்பிக்கையுடன் இணைந்து செயற்பட்டோம்.

ஜனாதிபதியுடன் இறுதியாக இடம்பெற்ற கலந்துரையாடலில் பறிக்கப்பட்ட மாகாண அதிகாரங்களை மீள வழங்குவது தொடர்பிலும், நியதிச் சட்டங்களை உருவாக்குவது தொடர்பிலும் நிபுணர்குழு ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி சம்மதித்தார். ஜனாதிபதி வெளிநாடு சென்ற நிலையில் குறித்த குழுவை நியமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் அவரின் பொறுப்பைச் செயற்படுத்துபவர்களும் குழுவை நியமிக்கவில்லை. 13ஆம் திருத்தம் தொடர்பில் இந்தியாவும் கரிசனையாக உள்ள நிலையில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியாவும் அழுத்தத்தை வழங்கவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிலையான அரசாங்கம் ஒன்றின் ஜனாதிபதியாக இல்லாத நிலையில் சில விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தென்னிலங்கையைச் சேர்ந்த சிலர் முட்டுக்கட்டை போடுகிறார்கள். அவ்வாறு முட்டுக்கட்டை போடுபவர்களுடன் மாகாண அதிகாரங்களை மாகாணத்துக்கு வழங்குவது தொடர்பில் பேசி வருகின்றோம் - என்றார். (அ-ம-20)

## இரண்டாம்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'அலுவலக மட்டத்திலான பேச்சுகளில் துரித இணக்கப்பாட்டை எட்டுவதற்கான பேச்சுத் தொடரும் எனச் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இந்தக் கலந்துரையாடல்களின் பின்னர் எமக்கு 2ஆம் கட்ட கடன் உதவிகிடைக்கும். எனவே, இது விடயத்தில் வீண் அச்சம் கொள்ளவேண்டியதில்லை. இலங்கையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்த வேண்டுமானால் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் சிலவற்றைச் சுட்டிக்காட்டியுள்ளது. அந்த இலக்குகளை நாம் அடையவேண்டும். அதேவேளை, இந்த அரசு சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஏற்ப ஆடுவதாக சிலர் கூறினர். அவர்களுக்கும் தற்போது தெளிவாக பதில் கிடைத்திருக்கும் என நம்புகின்றோம். சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டும் விடயங்கள் முக்கியமானவை, அரசுக்கு மட்டும் அல்லஎதிரணிக்கும்தனதுநிலைப்பாட்டை மாற்றிக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது' - என்றார். (அ-ம-44-26)

## முதியவரொருவர்...

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் அவருடைய உறவினர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் மற்றும் தேடுதல்களையடுத்தே அவர் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். உடுவில், மல்வம் பகுதியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் செல்வராசா (வயது-71) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி முதியவர் அறுவடையின் பின்னரான விளைபொருள்களை வயல்களில் இருந்து எடுத்து அதை விற்றுக் காசாக்கி வந்துள்ளார். இதற்காக அவர் வயலில் வேலைசெய்து கொண்டிருந்தபோது வெயிலால் மயங்கி வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-27-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## தொண்டு நிறுவனத்துக்கு அம்புலன்ஸ் கையளிப்பு

முல்லைத்தீவு, செப். 29

அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் அமைப்பால் முள்ளம்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் அமைப்பான 'உயிரிழை' அமைப்புக்கு அம்புலன்ஸ் வழங்கிவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக மேலதிக செயலாளர் க. கனகேஸ்வரன் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார்.

நிகழ்வில் அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் அமைப்பைச் சேர்ந்தவர்களும், உயிரிழை அமைப்பைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டனர். (ச-20)

# போதைப்பொருளை ஒழிக்க சிங்கப்பூர் சட்டம் வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 29

**போதைப்பொருள் கடத்தல்காரர்களை முறியடிக்க சிங்கப்பூரில் இருப்பது போன்ற கடுமையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இதன்மூலமே தற்போது ஆட்கொண்டுள்ள போதைப்பாவனைக்கு முற்றுப் புள்ளி வைக்கமுடியும்.**

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கான பரிந்துரைகளைப் பெறுவதற்கான விசேட நாடாளுமன்றக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாகத்தங்கம் கொண்டு வந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாகத்தீர்மானம் கொண்டுவந்தனர். அதனைப் போன்று மது, புகையிலை, சிகரெட் மற்றும் போதைப்பொருள் பாவனையில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்வர வேண்டும்.

புகையிலை, சிகரெட், மதுபானம் தொடர்பான வரி வருமானம் நாட்டுக்குச் சரியாகக் கிடைக்காமல் போவதற்கு நிறுவனங்களின் கைப்பாவையாக சில அரச அதிகாரிகள் மாறியுள்ள பின்னணியே காரணமாகும். போதைப்பொருள் கடத்தல்காரர்களைக் கட்டுப்படுத்த சிங்கப்பூரிலுள்ள கடுமையான சட்டங்களை இங்கும் பிரயோகிக்க வேண்டும். 225 பேரும் இணைந்து சட்டங்களை இயற்றினால் இதனையும் இல்லாதொழிக்க முடியும்.

இதன்மூலம் தற்போது ஆட்கொண்டுள்ள போதைப்பொருள் கடத்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் - என்றார். (ச-44)

## சுற்றுலா தினத்தையொட்டி கோட்டைப்பகுதி சிரமதானம்

யாழ்ப்பாணம், செப். 29

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு புராதன சின்னமாக விளங்குகின்ற யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டதுடன் மரபுரிமை பாதுகாப்பு விழிப்புணர்வும் நடைபெற்றது.

தொல்லியல் திணைக்களமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரியும் இணைந்து இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டன.

இதன்போது கோட்டையை அண்டிய பகுதிகள் சிரமதானம் செய்யப்பட்டன. மரபுரிமை பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான பலகையும் தொல்லியல் திணைக்களத்தினரால் நடப்பட்டது.

யாழ்.தொல்லியல் திணைக்களத்தின் யாழ்ப்பாணக் கோட்டைப் பொறுப்பதிகாரி பாலசுப்பிரமணியம் கபிலன், திணைக்கள அதிகாரிகாரிகள், யாழ். பல்லைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றனர். (ச)




## வெல்டர்ஸ் தேவை

யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் வேலைசெய்யக்கூடிய நல்லொழுக்கமுள்ள வெல்டர்ஸ் தேவை.

077 445 8582

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரையண்டிய பிரதேசத்தில் சிறு குடும்பத்திற்கு வீடு / அனெக்ஸ் மாத வாடகைக்குத் தேவை.

நல்லூர் விரும்பத்தக்கது.

1. Attached bathroom
2. 02 rooms with kitchen

தொடர்புகொள்க: 071 844 8007


## டிறிபேர்க் கல்லூரியில் மும்மொழி தினவிழா

கொடிகாமம், செப். 29

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் மும்மொழித் தினவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜெயதேவன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரத்ன மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர் (ச-159)




## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389

(CS 25393) A-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.